Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 30 2025

புதன்கிழமை 30, ஜுலை 2025 | ஒளி: 10 கதிர் 294 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## அரோகரா..!

வரலாற்றுச் சிறப்பு பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா செவ்வாய்க்கிழமை (29) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

– நிதர்ஷன் வினோத்



### நல்லூர் ஆலய வளாகத்துக்குள்

## அத்துமீறி நுழைந்த இராணுவ வாகனம்

■ பு.கஜிந்தன்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழாவானது செவ்வாய்க்கிழமை(29) காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் வெகு சிறப்பாக ஆரம்பமாகியது. இதன்போது நல்லூர் ஆலய முன் வாயில் வழியாக திடீரென ஒரு இராணுவ வாகனம் உள்நுழைந்ததால் அங்குப் பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர் திருவிழா காலத்தில் குறித்த பகுதியில் நல்லூர் ஆலய வளாகத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வாகனத்தைத் தவிர வேறு எந்த வாகனத்துக்கும் உள்ளே செல்வதற்கு அனுமதி இல்லை. அத்துடன், பாதணிகளுடன் செல்வதற்கும் அனுமதி இல்லை.

தொடர்ச்சி P2



## 'டிக்டோக்' காதலனின் 'தங்க' காதலி கைது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டிக்டோக் பிரபலங்களில் ஒருவரான தனது காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க வீட்டில் நகைகளை களவாடிய யுவதி உள்ளிட்ட ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் திங்கட்கிழமை (28) அன்று கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் டிக்டோக் சமூக வலைத்தளங்களில் தனது காணொளிகளை பதிவேற்றிப் பிரபலமானவராகத் தன்னை காட்டிக்கொண்டு வந்துள்ளார்.

தொடர்ச்சி P2



### 60 வருட உறவை

# "வலுவாக தொடர்வோம்"

### மாலைத்தீவு ஜனாதிபதி வழங்கிய இராப்போசனத்தில் ஜனாதிபதி அநுர

இலங்கைக்கும் மாலைத்தீவுக்கும் இடையிலான 60 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தி, எதிர்காலத்தில் இலங்கையும் மாலைத்தீவும் நெருங்கிய நண்பர்களாக மட்டுமல்லாமல், பொதுவான தொலைநோக்குப் பார்வையாலும் பொதுவான நோக்கத்தாலும் ஒன்றுபட்ட பங்காளிகளாக முன்னேறுவோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு (Dr.Mohamed Muizzu) குரும்பா மோல்டீவ்ஸ் (Kurumba Maldives) விடுதியில் திங்கட்கிழமை (28) வழங்கிய விசேட இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் நெருங்கிய நண்பராகவும் பிராந்திய பங்காளியாகவும் நீண்டகால உறவுகளைக் கொண்ட அழகிய மாலைத்தீவுக்கு வருகை தர முடிந்தமையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவு மற்றும் வரலாற்றுத் தொடர்புகளை நினைவு கூர்ந்தார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேலும் கூறியதாவது,

இலங்கையின் நெருங்கிய நண்பராகவும் பிராந்திய பங்காளியாகவும் நீண்டகால உறவுகளைக் கொண்ட அழகிய மாலைத்தீவுக்கு வருகை தர முடிந்தமையை கௌரவமாகக் கருதுகிறேன்.

முதலில், எனக்கும் எனது குழுவினருக்கும் வழங்கப்பட்ட விருந்தோம்பலுக்காக மாலைத்தீவு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாலைத்தீவுக்கான எனது விஜயம், நமது இரு நாடுகளையும் ஒன்றிணைக்கும் நீண்டகால நட்புறவையும், நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் மரியாதையையும், நமது பொதுவான விருப்பங்களையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்து சமுத்திரத்தில் அண்டை நாடுகளாக, நமது இரு நாடுகளின் எதிர்கால பாதைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. காலப்போக்கில் நம் மக்களிடையே உருவாகியுள்ள பரஸ்பர நல்லெண்ணம், புரிதல் மற்றும் உறவு ஆகியவை ஒரு தனித்துவமான பிணைப்பை உருவாக்கியுள்ளன. இன்று, இந்த உறவுகள் பல துறைகளில் இராஜதந்திரம் மற்றும் தீவிர ஒத்துழைப்பு மூலம் தொடர்ந்து போசிக்கப்படுகின்றன.

இந்த மாதம் நமது இரு நாடுகளுக்கும் இடையே வலுவான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் 60 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இது எனது வருகைக்குக் குறிப்பிடத்தக்கப் பெறுமதியைச் சேர்ப்பதுடன், இந்த தனித்துவமான நிகழ்வை நினைவுகூர மாலைத்தீவிற்கு வருகை தரக் கிடைத்தமையை ஓர் உண்மையான பாக்கியமாக நான் கருதுகிறேன்.

1965ஆம் ஆண்டு மாலைத்தீவுகள் சுதந்திரம் பெற்றது, தெற்காசிய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையை குறித்தது. இலங்கையில் மாலைத்தீவு சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திடுவதற்கு வசதி செய்ததன் மூலம், அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க செயல்பாட்டில் முக்கிய பங்கு வகித்ததில் இலங்கை பெருமை கொள்கிறது.

சுதந்திர மாலைத்தீவின் தேசிய கீதத்திற்கு புகழ்பெற்ற இலங்கை இசையமைப்பாளரான மறைந்த பண்டித் டபிள்யூ.டி. அமரதேவ இசையமைத்தார் என்பது எங்களுக்கு பெருமைக்குரிய விடயமாகும்.

மேதகு ஜனாதிபதி அவர்களே, எங்கள் கூட்டுச்செயற்பாடு பிராந்திய அண்டை நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பின் பிரதிபலிப்பாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதாக இருந்தாலும் சரி, நீலப் பொருளாதார முயற்சிகளை ஊக்குவிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது பலதரப்பு அமைப்புகளில் ஒத்துழைப்பாக இருந்தாலும் சரி, அமைதியான, வளமான மற்றும் நிலையான இந்து சமுத்திர பிராந்தியத்தை உருவாக்க மாலைதீவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை உறுதி பூண்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "சுபீட்ச பயணத்தில் தீர்க்கமான காரணி"



இலங்கை-மாலைத்தீவு இராஜதந்திர உறவுகள் 60ஆவது ஆண்டு நிறைவை எட்டியுள்ள நிலையில், இலங்கை ஜனாதிபதியின் மாலைத்தீவு உத்தியோகபூர்வ விஜயம், இரு நாடுகளினதும் பொருளாதார ரீதியாக ஒருங்கிணைந்த மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் ஒரு தீர்க்கமான காரணியாக இருக்கும் என்று மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு தெரிவித்தார்.

'குரும்பா மோல்டீவ்ஸ்' விடுதியில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு திங்கட்கிழமை(28) அன்று வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இராப்போசன விருந்துபசாரத்தின் பின்னர் மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு இவ்வாறு குறிப்பிட்டார்.

மாலைத்தீவு-இலங்கை உறவுகளின் பொருளாதார முக்கியத்துவத்தை எடுத்துரைத்த மாலைத்தீவு ஜனாதிபதி, பிராந்தியத்தில் செழிப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப இலங்கையுடன் இன்னும் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகக் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று முக்கியமான உறவுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக தெரிவித்த அவர், தற்போது கருவாடு போன்ற பாரம்பரிய வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு அப்பால் சுற்றுலா, டிஜிட்டல் தொழில்நுட்பம், பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கலாசார பரிமாற்றங்கள் போன்ற நவீன துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவடைந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்த பன்முகப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் எதிர்காலத் தன்மையை மட்டுமல்லாமல், வேகமாக மாறிவரும் உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இரு நாடுகளின் பொதுவான விருப்பத்தையும் பிரதிபலிக்கிறது என்று ஜனாதிபதி முய்சு மேலும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2




## நள்ளிரவு முதல் ரயில்கள் ஓடாது

குறைபாடுகள், நிர்வாக சிக்கல்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு, ரயில் சாரதிகள் புதன்கிழமை (30) நள்ளிரவு முதல் 48 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று லோகோமோட்டிவ் ஆபரேட்டிவ் இன்ஜினியர்ஸ் சங்கம் அறிவித்துள்ளது.




### இளம் மகளை தவிர, யட்டிநுவர எதிர்க்கட்சித் தலைவர் குடும்பமே

## மர்மமான முறையில் மரணம்

யட்டிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சம்பிகா விஜேரத்ன (வயது 53), அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் முருத்தலாவை கம்பியாடிய வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## தங்க முலாம் துப்பாக்கி வழக்கு: துமிந்த விடுதலை

தங்க முலாம் பூசப்பட்ட T-56 துப்பாக்கி தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க கல்கிசை நீதவான் நீதிமன்றத்தால் செவ்வாய்க்கிழமை (29) விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் நேரடி மற்றும் சூழ்நிலை ஆதாரங்கள் இல்லாததால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க விடுதலை செய்யப்படுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

### ஜனாதிபதி அனுரவுக்கு சேறுபூசிய

## குட்டி ஆராச்சி மன்னிப்பு கேட்டார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸ குட்டி ஆராச்சி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலத்தை செவ்வாய்க்கிழமை (29) அன்று அளித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை அவமதிக்கும் வகையில் ஒரு கருத்தை தெரிவித்தமைக்காக நிபந்தனையற்ற வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## நாடு திரும்பிய நாமலுக்கு பிணை

மாலைத்தீவில் இடம்பெற்ற திருமண வைபவத்துக்கு சென்று, செவ்வாய்க்கிழமை (29) அன்று நாடுதிரும்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்று தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்தமையினால் அவருக்கு, திங்கட்கிழமை(28) அன்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், தனது சட்டத்தரணிகள் சகிதம், செவ்வாய்க்கிழமை (29) அன்று நீதிமன்றத்தில் நாமல் ராஜபக்ஷ ஆஜரானார். நகர்த்தல் மனு மூலம் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு அவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், பிடியாணையும் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# “வலுவாக தொடர்வோம்”

தனது ஆங்கில ஆசிரியரும்,பௌதீக ஆசிரியரும் இலங்கையர்கள் என்று ஜனாதிபதி என்னிடம் கூறினார். அது தொடர்பில் நான் பெருமைப்படுகிறேன். மாலைதீவின் பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பல்வேறு வழிகளில் பங்களித்த ஆசிரியர்களாக பல தலைமுறைகளுக்கு அறிவை வழங்கிய ஆயிரக்கணக்கான இலங்கையர்களைப் பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். மாலைத்தீவில் இலங்கையர்கள் பெறும் மரியாதை தொடர்பில் நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம். இலங்கையை தங்கள் இரண்டாவது வீடாகக் கருதி, எங்கள் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்பது, மருத்துவ சிகிச்சை பெறுவது அல்லது எங்கள் நாட்டில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பலை அனுபவிப்பது போன்ற மாலைத்தீவு நாட்டினரையும் நாங்கள் பாராட்டுகிறோம். அவர்கள் ஒருவருக்கொருவர் மற்றைய நாட்டி ல் வசிக்கும் வெளிநாட்டினர் மட்டுமல்ல, நமது நாடுகளை இணைக்கும் பாலங்களாகவும் உள்ளனர்.

சுற்றுலா என்பது நமது இரு நாடுகளின் பொருளாதாரங்களின் முக்கிய பகுதியாகும். இலங்கை சுற்றுலாத் தலமாகத் தேர்ந்தெடுத்த முதல் பத்து நாடுகளில் மாலைதீவும் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் மாலைத்தீவு சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சியைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இரண்டாவது வீட்டில் அனுபவத்தைப் பெற இலங்கைக்கு வருகை தருமாறு மாலைத்தீவு சுற்றுலாப் பயணிகளை நாங்கள் அழைக்கிறோம்.

எதிர்காலத்தை நோக்கி நாம் பார்க்கும்போது, நமது இரு நாடுகளும் நண்பர்களாக மட்டுமல்லாமல், ஒரு பொதுவான பார்வை மற்றும் ஒரு பொதுவான நோக்கத்தால் ஒன்றுபட்ட பங்காளர்களாகவும் முன்னோக்கிப் பயணிப்போம் என்று நான் நம்புகிறேன். இந்த வருகை நமது இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான ஒத்துழைப்பு, பரந்த புரிதல் மற்றும் சிறந்த நட்புக்கு வழி வகுக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்களுக்கு ஆரோக்கியமான வாழ்விற்குப் பிரார்த்திக்கும் அதேவேளை, மாலைதீவை மிகவும் வளமான தேசமாக மாற்றுவதற்கு உங்களின் மன உறுதிக்காக பிரார்த்திக்கிறேன் என்றார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை தூதுக்குழு என்பன இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மர்மமான முறையில் மரணம்

பேராதனை பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து அவர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இறந்த சம்பிகா விஜேரத்ன நீண்டகால அரசியல்வாதி. அவரது உடல் வீட்டின் ஒரு அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது, அதே நேரத்தில் அவரது 16 வயது மகள் மற்றும் மனைவியின் உடல்களின் பாகங்கள் வீடு முழுவதும் சிதறிக்கிடந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் அவர்களின் இளம் மகள் உயிர் பிழைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மர்மமான மரணங்களுக்கான காரணம் இன்னும் தெரியவில்லை என்று பேராதனை பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தற்கொலையா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## தங்க முலாம் துப்பாக்கி வழக்கு: துமிந்த விடுதலை

‘ஹெவ்லொக் சிட்டி’ அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள பாதுகாப்பு காவலர் ஒருவர், T56 துப்பாக்கியுடன் சொகுசு வாகனத்தில், 2025 மே. 20ஆம் திகதி வந்த பெண்ணொருவரை தடுத்து வைத்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். அதன் பின்னர், அப்பெண்ணுடன் மற்றுமொரு பெண், துமிந்த திசாநாயக்கவின் வீட்டில் சமையல்காரராகப் பணியாற்றியவர். துமிந்த திசாநாயக்க ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குட்டி ஆராச்சி மன்னிப்பு கேட்டார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸ குட்டி ஆராச்சி மற்றும் இருவரிடமிருந்து ரூ.10 பில்லியன் இழப்பீட்டு வழங்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கோரியிருந்தார். எனினும், ஜனக திஸ்ஸ குட்டி ஆராச்சி தனது நிபந்தனையற்ற வருத்தத்தைத் தெரிவித்து வழக்கைத் தீர்த்து வைத்தார்.

கொழும்பு மாவட்ட மேலதிக நீதவான் சந்திம ஜீவந்தரா முன் வழக்கு, செவ்வாய்க்கிழமை தீர்த்து வைக்கப்பட்டது.

2023 ஆகஸ்ட் 19, அன்று மத்திய கொழும்பில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு தவறான அகருத்தால் தனது நற்பெயருக்கு சேதம் ஏற்பட்டதாகவும், அதனால் ஏற்பட்ட சேதத்திற்கு பத்து பில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் கூறி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி வேட்பாளராக இருந்தபோது இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## அத்துமீறி நுழைந்த...



நல்லூர் கந்தன் ஆலயமானது உலகளாவிய ரீதியில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இவ்வாறான சூழ்நிலையில் இராணுவத்தினரின் குறித்த வாகனம் அத்துமீறி உள்நுழைந்தமை உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் திருவிழாவின்போதும் பௌத்த பிக்கு ஒருவர் வாகனத்தில் நல்லூர் வளாகத்திற்குள் சென்று அடாவடித்தனத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘டிக்டோக்’ காதலனின் ‘தங்க’ காதலி கைது

குறித்த இளைஞனுடன் டிக்டோக் மூலம் அறிமுகமான சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த யுவதி, அவரை காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், தனது காதலனுக்கு , அதிநவீன மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் , காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காகவும் தனது வீட்டில் இருந்து சுமார் 19 பவுண் நகையை களவெடுத்து, அதை காதலனிடம் கொடுத்துள்ளார்.

வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனமை தொடர்பில், யுவதியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யுவதி மீது சந்தேகம் கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, வீட்டில் இருந்த நகைகளைத் தான் களவெடுத்து காதலனுக்கு வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார்.

யுவதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில், காதலனைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில், வீட்டில் நகைகளை களவெடுத்த யுவதி , அவரது காதலன், யுவதி வீட்டில் நகைகளை களவெடுப்பதற்கு உடந்தையாக செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு நபர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## “செவனகல, பெலவத்த வீழ்ச்சி அடைகின்றது”

பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகள் இரண்டும் நமது நாட்டிற்கு வளங்களாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான இரு நிறுவனங்களாகும். இந்த இரண்டு நிறுவனங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நாட்டிற்கும், அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இந்த இரண்டு நிறுவனங்களும் நாளுக்கு நாள் வீழ்ச்சியை கண்டு வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு செவ்வாய்க்கிழமை (29) அன்று கருத்துரைத்த போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலை கடந்த 9 மாதங்களாக ஊழியர் சேமலாப நிதியை செலுத்தவில்லை. இவ்வாறு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூ.3,240 இலட்சமாகும். இதன் காரணமாக, 3 மாதங்களுக்கு ரூ.230 இலட்சம் EPF மிகை ஊதியத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளன. 2024 ஆகஸ்ட் இல் இலங்கை வங்கியிலிருந்து ரூ.5,000 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது. 2024 நவம்பரில் ரூ.10,000 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது, அண்மையில் மற்றுமொரு கடனையும் பெற்று சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இத்தருணம் வரை விவசாயிகளுக்கு ரூ. 3,000 இலட்சங்களையும், விநியோகஸ்தர்களுக்கு ரூ.4,000 இலட்சங்களையும் செலுத்த வேண்டியுள்ளது. பெலவத்த நிறுவனத்தில் 3,795 பேர் பணியாற்றுகின்றனர். இதன் மூலம் சுமார் 5,700 விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலையின் நிலை இவ்வாறு தான் காணப்படுகிறது.

செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலையின் நிலைமையை நோக்கும் போது ரூ.2,050 இலட்சத்தை விவசாயிகளுக்கு செலுத்த வேண்டி காணப்படுகின்றன. ரூ.150 இலட்சமளவில் EPF கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. விநியோகஸ்தர்களுக்கு ரூ.1,000 இலட்சம் செலுத்த வேண்டி காணப்படுகின்றன. VAT வரியாக ரூ.4,000 இலட்சமும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிக் காணப்படுகின்றன. இங்கு 1300 ஊழியர்கள் காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 3,900 விவசாயிகள் இந்த செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலையின் மூலம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அவ்வாறே இலங்கை வங்கிக்கு 2,000 இலட்சம் ரூபா கடனையும் இந்த செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலை செலுத்த வேண்டிக் காணப்படுகின்றன எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## “சுபீட்ச பயணத்தில்...

கல்வி, சுகாதாரம் மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்ற முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை நினைவு கூர்ந்த மாலைத்தீவு ஜனாதிபதி, இந்த ஒத்துழைப்பு தற்போதைய பொருளாதார விரிவாக்கத்திற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அண்மைய உயர்மட்ட கலந்துரையாடல்கள் இது வரை பயன்படுத்தப்படாத புதிய பொருளாதார மூலங்கள் குறித்து ஆராய்ந்து இரு நாட்டு மக்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தும் என்றும் ஜனாதிபதி முய்சு நம்பிக்கை தெரிவித்தார்.

பல தலைமுறைகளாக, மாலைத்தீவு மக்கள் இலங்கையை ஒரு பங்காளராக மட்டுமல்லாமல் இரண்டாவது வீடாகவும் கருதி வருவதாகக் கூறிய அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வலுவான தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியிலான உறவுகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவர் தெரிவித்தார். இந்த உறவு ரீதியான உணர்வு இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு தனித்துவமான சாதக நிலைமையை உருவாக்குகிறது என்று மாலைதீவு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.




## பி.சியின் வீட்டில் ‘போதை’ களஞ்சியம்

தனது வீட்டில் போதைப்பொருள் களஞ்சியசாலை நடத்தி வந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர், கிட்டத்தட்ட 20 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொரலஸ்கமுவ, பெல்லன்வில பகுதியில் உள்ள தனது வீட்டில் இவ்வாறு போதைப்பொருள் களஞ்சியசாலை வைத்துள்ளார்.

கொஹூவல காவல்துறையின் போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் ஒரு கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களில் கான்ஸ்டபிளின் மனைவி மற்றும் போதைப்பொருட்களை வழங்கிய நபரும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 150 மி.கி. போதைப்பொருள் கொண்ட 21 பெட்டிகள் மற்றும் 300 மி.கி. போதைப்பொருள் கொண்ட 1 பெட்டி என மொத்தம் 1,330,420 போதைப் பொருட்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கொஹூவல காவல்துறையின் போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் கான்ஸ்டபிள், பொரலஸ்கமுவ, பெல்லன்வில ஜெயா மாவத்தை பகுதியில் தற்காலிகமாக வசித்து வருவதாகவும், அவர் தனது வீட்டில் போதைப்பொருள் களஞ்சியசாலை நடத்தி தீவு முழுவதும் விநியோகித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

## அடையாளம் காண உதவுங்கள்

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நபர் ஒருவரை அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறு, சிகிச்சை பெற்று வரும் நபர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய கமால்தீன் என்பவர் எனும் தகவல் மாத்திரமே கிடைத்துள்ளது.

சுமார் 25 நாட்களுக்கு முன்னர் இந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



பக்கவாதம் நோயால் பாதிக்கப்பட்டு, பேச முடியாமல் காணப்படும் இந்த நபர் பற்றிய தகவல் தெரியும் பட்சத்தில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தொடர்பினை ஏற்படுத்துமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# நல்லூர் கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா செவ்வாய்க்கிழமை (29) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

காலை 08.15 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெற்றது.

பிள்ளையார், முருகப்பெருமான், வள்ளி-தெய்வானை, மூஷிகம், மயூரம், அன்னம் ஆகிய மூன்று தங்க வாகனங்களில் உள்வீதி உலா வந்து காட்சியளித்தனர். மகோற்சவம், தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளது.

மகோற்சவத்தில், மஞ்சள் திருவிழா எதிர்வரும் 07ஆம் திகதியும்,மாம்பழ திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதியும், சப்பரத் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதியும், தேர்த் திருவிழா 21ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

தீர்த்த திருவிழா ஓகஸ்ட 22ஆம் திகதி காலை இடம்பெற்று, மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவம் நிறைவுபெறும்.

- நிதர்ஷன் வினோத்

















சகோதரியுடன் வசித்த

# சகோதரன் சடலமாக மீட்பு

■ நிதர்ஷன் வினோத், பு.கஜிந்தன்

தனது சகோதரியுடன் வசித்து வந்த சகோதரன் செவ்வாய்க்கிழமை(29) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், 1ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்த வைரமுத்து சாந்தலிங்கம் (வயது 54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபரும் 56 வயதுடைய சகோதரியும் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் வசித்து வந்துள்ளனர். இவ்வாறான



நிலையில், அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது குறித்து உயிரிழந்தவரது சகோதரி வழங்கிய வாக்குமூலத்தில், “நான் குறி சொல்லும் வேலை செய்து வருகிறேன். இரவு மூவர் வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்டனர். அவர்களுக்குத் தண்ணீர் எடுப்பதற்காக உள்ளே சென்றவேளை, அவர்கள் உள்ளே வந்து என்னைக் கட்டி போட்டுவிட்டு நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

பின்னர் அதிகாலை 3 மணியளவில் நான் கட்டினை அவிழ்த்துவிட்டு வெளியே வந்து பார்த்தவேளை தம்பி சடலமாகக் காணப்பட்டார்” என கூறியுள்ளார்.

இருப்பினும், குறித்த பெண் வழங்கிய வாக்குமூலத்தில் திருப்தியடையாத யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# காத்தான்குடி கடற்கரையை தூய்மைப்படுத்திய இராணுவம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்


‘ஒரு செழிப்பான தேசம் - அழகான வாழ்க்கை’ என்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் எண்ணக்கருவில் உதித்த ‘கிளீன் ஸ்ரீலங்கா’ தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய சுற்றுலா தளமான காத்தான்குடி கடற்கரையை சுத்தப்படுத்தும் பணிகள் இன்று காலை சிறப்பாக இடம்பெற்றது.

இந்தச் சிரமதான நிகழ்வு, மட்டக்களப்பு குருக்கள்மடம் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. குருக்கள்மடம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் ரஞ்சன் பகல்ல தலைமையில் இத்திட்டப் படுத்தும் பணிகள் இடம்பெற்றன.

சிரமதானத்தின்போது, கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு, அதனுடன், தொடர்புடைய முறையான அகற்றும் நடவடிக்கைகள் நகர சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர், நகரசபை உறுப்பினர்கள், சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பாரந்தூக்கி சாரதிக்கு விளக்கமறியல்



பொரளை கனத்தை சுற்றுவட்டாரப் பகுதியில் இடம்பெற்ற விபத்துடன் தொடர்புடைய பாரந்தூக்கியின் ஓட்டுநர் நிமந்த சேனாதீரவை ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் எம்.என். ரிஜ்வான், செவ்வாய்க்கிழமை (29) உத்தரவிட்டார்.

பாரந்தூக்கி வாகனத்தின் உரிமையாளர் மாலன் ஸ்ரீ பெர்னாண்டோவை ரூ. 500,000 சரீரப் பிணையில் விடுவிக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

விபத்து தொடர்பில் பொரளை பொலிஸார், நீதிமன்றத்தில் முன்வைத்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்தே மேலதிக நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

பொரளை கனத்தை சுற்று வட்டத்திற்கு அருகில் திங்கட்கிழமை (28) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏழுபேர் காயமடைந்தனர்.

ராஜகிரியவிலிருந்து பௌத்தலோக மாவத்தை நோக்கிச் சென்ற பாரந்தூக்கி, ஆறு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞையில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அத்துருகிரியவைச் சேர்ந்த 62 வயதுடையவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் அடங்குவர்.

‘உங்கள் உதவிக்கு நன்றி’:

# குறுஞ்செய்தியால் சிக்கினார் ஓய்வுபெற்ற டிஐஜி

ஓய்வுபெற்ற மூத்த டிஐஜி பிரியந்த ஜெயக்கொடி குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடல்நிலை சரியில்லாமல் ராகமவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், திங்கட்கிழமை(28) மதியம் அவர் கைது செய்யப்பட்டார். தற்போது குற்றப் புலனாய்வுத் துறையின் மேற்பார்வையின் கீழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவர், ஓய்வுபெற்ற மூத்த டிஐஜி செவ்வாய்க்கிழமை(29) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் வுட்லர் கூறினார்.

வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பிரபல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி, இந்த நாட்டில் போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைச் செய்து வரும் ஒருவரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக எழுந்த பொய்யான புகார் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை



ஜெயக்கொடியைக் கைது செய்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வெளிநாட்டில் வசிக்கும் சக்திவாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி என்று கூறப்படும் ‘கெஹல்பத்தர பத்மே’ தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக ஓய்வுபெற்ற மூத்த டிஐஜி பிரியந்த ஜெயக்கொடி சில நாட்களுக்கு முன்பு பதில் ஐஜிபியிடம் புகார் அளித்திருந்தார்.

இருப்பினும், மூன்று நாட்களுக்கு முன்பு கண்டி பகுதியில் கொலை மிரட்டல் விடுத்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவரை குற்றப் புலனாய்வுத் துறை கைது செய்திருந்தது. அவரது தொலைபேசியை சோதனை செய்தபோது, பிரியந்த ஜெயக்கொடி அனுப்பியதாகக் கூறப்படும் குறுஞ்செய்திகள், ‘உங்கள் உதவிக்கு நன்றி’ போன்றவை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர், முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர், முன்னாள் ஐஜிபி, பணியில் உள்ள மூத்த டிஐஜி மற்றும் ஜெயக்கொடியின் நெருங்கிய உறவினரான திரு. பிரியந்த ஜெயக்கொடிக்கு மிரட்டல் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாகவும், அந்த நபர் துபாயில் இருந்து அந்த அழைப்புகளை மேற்கொண்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

துபாயில் இருந்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அந்த அழைப்புகளை மேற்கொண்டதற்காகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், இலங்கைக்கு வந்ததும் வெளிநாட்டு சிம் கார்டு உள்ள தொலைபேசியில் உள்ளூர் சிம் கார்டைச் செருகுவதன் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்பது மேலும் தெரிய வந்துள்ளது.

நாடு திரும்பும் போது

# ‘மிதிகம சஹ்ரான்’ சிக்கினார்

‘மிதிகம சஹ்ரான்’ என்றழைக்கப்படும் ஹிக்கடுவ லியனகே சஹ்ரான் சிசிகெலம் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர், இந்தியாவில் இருந்து திரும்பும் போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) வருகை முனையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் துறை (CID) அதிகாரிகளால் திங்கட்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்டார்.

வெலிகமவைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர், மாத்தறை மற்றும் பாணந்துறை பொலிஸ் பிரிவுகளில் பல கொலைகள் மற்றும் கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகிறது.

அவர் தற்போது பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகத் தலைவர் நதுன் சிந்தக விக்ரமரத்ன என்ற ஹரக் கட்டாவின் கூட்டாளி என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



அவர் மற்றொரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான மிதிகம சுட்டியுடனும் நெருங்கிய தொடர்புடையவராவார். மாலை 6:30 மணியளவில் சென்னையிலிருந்து இண்டிகோ விமானம் 6E-1173இல் சஹ்ரான் விமான நிலையத்திற்கு வந்திருந்தார். முன்கூட்டிய உளவுத்துறையின்படி செயல்பட்ட CID அதிகாரிகள், வருகை முனையத்தில் அவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக களுத்துறை குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மட்டு. ரயில் நிலைய

# விடுதி பகுதியில் பாரிய தீ



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் விடுதி பகுதியில் செவ்வாய்க்கிழமை(29) அன்று திடீரென ஏற்பட்ட தீ பரவலால் அப்பகுதியிலிருந்த மரங்கள் தீயில் எரிந்துள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபை தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

அந்த பகுதியில் உள்ள புற்தரைகளில், பனை மரங்கள் மற்றும் மரங்களில் பற்றிய தீ புகையிரத எஞ்சின் திருப்பும் பகுதி மற்றும் புகையிரத பெட்ரோல் தாங்கி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பகுதியை நோக்கி தீ பரவத் தொடங்கியது.

இதையடுத்து, மாநகரசபை முதல்வர் சிவன் பாக்கியநாதனின் பணிப்புக்கு அமைய,உறுப்பினர்கள் தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் சுமார் 2 மணித்தியாலம் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

# கடல் நீருக்காக போதுமான அளவு எவரும் அழவில்லை

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய கடல் சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் தீ விபத்து சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் நீண்ட விசாரணைக்குப் பிறகு, சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனம் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு பில்லியன்டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவத்தில் கடலுக்கும் அதன் கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட சேதத்தின் அளவைக் கணக்கிட முடியாது என்றும் வழக்கு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒரு கடல் என்பது தாவரங்கள் மற்றும் விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட ஏராளமான இயற்கை வளங்களையும், நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் பெரிய பரவலையும் கொண்ட ஒரு பகுதி.

கடல், மிகவும் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்பு, மனித தலையீட்டால் நிலத்திலும் கடலிலும் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக மாசுபாடு அல்லது மாசுபாட்டிற்கு உட்பட்டது. தற்போதுள்ள இயற்கை நிலைக்கு ஏற்படும் இத்தகைய சேதத்தை கடல் மாசுபாடு என்று அழைக்கலாம்.

கொழும்பு துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடலில் கப்பல் தீப்பிடிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதன் மூலமும், தங்கள் அரசியலமைப்புச் சட்டப் பொறுப்பைத் தவிர்ப்பதன் மூலமும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாகவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. முன்னூற்று அறுபத்தொரு பக்க தீர்ப்பில், இது சமீபத்திய வரலாற்றில் மிக மோசமான கப்பல் விபத்து மற்றும் மோசமான சுற்றுச்சூழல் சோகம் என்று கூறப்பட்டுள்ளது. திறந்த கடலில் 13 நாட்களாக எரிந்து கொண்டிருந்த கப்பல், 2021 ஜூன் 17 அன்று திறந்த கடலில் மூழ்கி, பெரும் கடல்சார் சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்தியது.

'எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பல் மூழ்கிவிட்டது. ஏராளமான கடல் வாழ் உயிரினங்கள் இறந்துவிட்டன. கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாக நீடித்த விசாரணையும் முடிவடைந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான வழக்குகள் சர்வதேச நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தை ஈடுசெய்ய முடியுமா? இறந்த கடல்வாழ் உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏற்படும் சேதத்திற்கும் எவ்வாறு நீதி வழங்க முடியும்?

இந்த நேரத்தில் சர்வதேச மரபுகள் மற்றும் இது தொடர்பாக சர்வதேச கடல்சார் ஆணையத்தின் தலையீடு மிகவும் முக்கியமானதாக இருக்கும். இது தொடர்பாக சர்வதேச சட்ட அமைப்புகளின் பொறுப்பும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு விஷயமாகும். எந்த சூழ்நிலையிலும், அந்த நேரத்தில் இருந்த அரசியல் சக்தி இந்த விஷயத்தில் பல சட்டவிரோத பரிவர்த்தனைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மூழ்கிய பிறகு பெறப்பட்ட இழப்பீடு குறித்த புள்ளிவிவரங்கள் முழுமைக்கும் நீதி வழங்க முடியாது. இதற்குத் தேவையான நடவடிக்கைகள் இருக்க வேண்டும். இல்லையெனில், எதிர்கால துயரங்களுக்குப் பிறகு, "நீங்கள் கடல் நீருக்காக போதுமான அளவு அழவில்லை" என்று நாம் சொல்ல வேண்டியிருக்கும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






எம்.எஸ்.எம்.ஐயூப்

# புதிய அரசாங்கமும் புதிய அரசியலமைப்பும்

புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதாக தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வருவதற்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தது. அது அக்கட்சியின் வாக்குறுதிகளில் முதன்மையான ஒன்றாகவும் கருதப்பட்டது. ஏனெனில், தேசிய மக்கள் சக்தி சமூக அமைப்பையே மாற்றி அமைக்க வேண்டும் (system change) என்றே கூறி வந்தது.

ஆயினும், இப்போது அரசாங்கத்தின் தலைவர்களில் எவரும் அதைப் பற்றி எதையும் கூறுவதாக இல்லை. புதிய அரசியலமைப்பு என்பதை தமிழ் தலைவர்கள் மிகவும் அக்கறையுடன் நோக்குகிறார்கள். ஏனெனில், அவ்வாறான புதிய அரசியலமைப்பொன்றில் இனப் பிரச்சினைக்கானத் தீர்வும் பொதிந்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

தேர்தலுக்கு முன்னர் பொதுவாக, தாம் பதவிக்கு வந்தால் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூறினார்களேயல்லாமல் எப்போது அதைக் கொண்டு வருவோம் என்று அவர்கள் கூறவில்லை. ஆயினும், அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் மூன்று வருடங்களில் தான் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவோம் என்று கூறினார்கள்.

புதிய அரசியலமைப்பு என்ற விடயத்தில் இலங்கை மக்களுக்கு மிக மோசமான அனுபவங்களே இருக்கின்றன. எனவே, அவர்கள் எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதைத் தவிர்க்க முடியாது. அந்த பழைய அனுபவங்களைச் சற்று பின்னோக்கி பார்ப்பது பொருத்தமானதாகும்.

1972 ஆம் ஆண்டே முதன் முதலாகச் சுதந்திர இலங்கையில் அரசியலமைப்பு மாற்றம் ஒன்று இடம்பெற்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சுதந்திரத்துக்கு முன்னர் வரையப்பட்ட சோல்பரி அரசியலமைப்பே அது வரை அமலிலிருந்தது. சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதனை முற்றாக நீக்கி இலங்கையை ஒரு குடியரசாக பிரகடனப்படுத்தும் வகையில் புதிதாக அரசியலமைப்பொன்றை அறிமுகப்படுத்தியது. அதன் மூலம் இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான சகல அரசியல் மற்றும் நிர்வாக தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு இலங்கை பூரண சுதந்திர நாடாக மாறியது.

எனினும் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அதே ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியரசு அரசியலமைப்பைத் திருத்தி நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியது. அவ்வாறு ஜனாதிபதி பதவிக்கு முதன் முதலாகத் தாமாக நியமிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜயவர்தன 1978ஆம் ஆண்டு முழு அரசியலமைப்பையே மாற்றி புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வந்தார்.

அது ஏறத்தாழ சர்வாதிகாரி ஒருவரைத் தோற்றுவித்தது. அதை இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு என்று பலர் அழைக்கின்றனர். அது வரை அமலில் இருந்த தொகுதி வாரித் தேர்தல் முறைக்குப் பதிலாக விகிதாசார தேர்தல் முறை அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்புதிய அரசியலமைப்பை நாட்டில் பலர் எதிர்த்தனர். இரத்மலானை விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டு இருந்த விமானம் ஒன்றும் 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அக்காலத்தில் உருவாகியிருந்த தமிழ் ஆயுத குழுவொன்று இந்த புதிய அரசியலமைப்பை எதிர்த்து அக் குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று அக்காலத்தில் கூறப்பட்டது.

இவ்வரசியலமைப்பை மாற்றி அமைப்பது 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் வாக்குறுதிகளில் பிரதான ஒன்றாக இருந்தது. அவர் 1994 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும், அவருக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவில்லை. எனவே, அவரால் அந்த அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டு வர முடியவில்லை.

ஆயினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய ஆதரவு வழங்குவதாக 1994ஆம் ஆண்டு அவரோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட காமினி திசாநாயக்க தெரிவித்தார். எனினும், பகுதி பகுதியாகவன்றி முழுமையாக அரசியலமைப்பை மாற்றுவதே தமது நோக்கம் எனக் கூறி சந்திரிகா அதை நிராகரித்தார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவும் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்து இருந்தார். குறிப்பாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக அவர் கூறினார். எனினும் அதற்காக அவருக்கு அம்முறை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவில்லை.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றி பெற்ற நிலையில், 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஏறத்தாழ அந்த நிலையை அவர் அடைந்தார். ஏனைய சில கட்சிகளின் ஓரிரு எம்.பிக்களை விலைக்கு வாங்கி அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைத் திரட்டிக்கொண்டார். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குப் பதிலாக அதை மேலும் பலப்படுத்திக் கொள்ளவே அவர் அதைப் பயன்படுத்தினார். புதிய அரசியலமைப்பு என்ற விடயம் முற்றாக மறைக்கப்பட்டுவிட்டது.

ஊழலும் கொலையும் அடாவடித்தனமும் நிறைந்த அந்த ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அணி திரண்டதன் விளைவாக, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தார். புதிதாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தனர்.

அதற்காக 2016ஆம் ஆண்டு பாராளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்பட்டது. நாடளாவிய ரீதியில் மக்கள் கருத்து திரட்டப்பட்டது. அக்கருத்துக்களின் பிரகாரம் கொண்டு வர வேண்டிய சட்டத் திருத்தங்களைப் பரிந்துரை செய்வதற்காக ஆறு உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றின் பரிந்துரைகளுக்குச் சட்ட வடிவம் கொடுப்பதற்காக பிரதமரின் தலைமையில் வழிநடத்தல் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. அதன் இடைக்கால அறிக்கை 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆயினும், அதன் மூலம் சமஷ்டி மறுக்கப்பட்டுள்ளது என்று தமிழர்களும் சமஷ்டி வழங்கப்படப் போகிறது என்று சிங்களவர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதற்கிடையே ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. அரசாங்கம் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் படுதோல்வி அடைந்தது. மைத்திரிபால, மஹிந்தவை மீண்டும் பிரதமராக நியமித்ததால் அரசியல் நெருக்கடி ஒன்றும் உருவாகியது. 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று முஸ்லிம் பயங்கரவாத குழுவொன்று ஒரே நாளில் பல இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்து அரசாங்கம் பாரியதோர் நெருக்கடியை எதிர்நோக்கியது. இதுபோன்ற பல காரணங்களால் புதிய அரசியலமைப்புக்கான முயற்சி மறைக்கப்பட்டுவிட்டது.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றார். அவரும் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்து இருந்தார். ஆயினும், அவருக்கு அதற்கான தெளிவு இருக்கவில்லை. அதற்கிடையே கொவிட்-19 பரவியது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியையும் எதிர்நோக்கியது. புதிய அரசியலமைப்பு பற்றிய விடயம் கைவிடப்பட்டது.

இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு விடயத்தில் இது வரை எதையும் செய்யாவிட்டாலும், அதைக் குறை கூற முடியாது. புதிய அரசியலமைப்பொன்று என்பது இலகுவான விடயமல்ல. பல்வேறு சமூகக் குழுக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்போது, புதிய பிரச்சினைகள் அதனால் உருவாகாத முறையில் அவற்றைத் தீர்க்க வேண்டும். பொருளாதார மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் அதில் அடங்கியிருக்க வேண்டும். மாறி வரும் சமூக பொருளாதார மற்றும் சர்வதேச நிலைமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினைக்கானத் தீர்வு அதில் பொதிந்திருக்க வேண்டும். அதேவேளை, அது தற்போது முரண்பட்டு இருக்கும் பல்வேறு இனங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் அபிலாஷைகளைக் குறைந்தபட்ச அளவிலாவது தீர்க்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் நீதியையும் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறானதோர் முயற்சியைக் குழப்ப நாட்டில் எத்தனையோ குழுக்கள் இருக்கின்றன. சில குழுக்கள் இம்முயற்சியைப் பயன்படுத்தி இன ரீதியாக குழப்பங்களை ஏற்படுத்தலாம். அவற்றில் சில குழுக்கள் இனப் பிரச்சினை தீர்வதைப் பார்க்கிலும் அதனைத் தீராமல் இருப்பதையே விரும்புகின்றன. ஏனெனில், இனப் பிரச்சினை தீர்ந்தால் அவர்களது இருப்பு அத்தோடு முடிவடைந்துவிடும்.

வேறு சில குழுக்கள் இம்முயற்சியைப் பயன்படுத்தி அரசியல் ரீதியில் குழப்பங்களை ஏற்படுத்தலாம். நாட்டில் மொத்த நலனைப் பார்க்கிலும் தத்தமது சுயநலன்களை அரசாங்கம் முதன்மைப்படுத்த வேண்டும் என்றே இக்குழுக்கள் கருதுகின்றன. இந்த நிலையில், எடுத்த எடுப்பில் அரசாங்கம் அவசரப்பட்டு புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வர வேண்டும் என்று கருதுவது பொருத்தமானதல்ல.

குறிப்பாக, பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்த ஒரு நாட்டை பொறுப்பேற்ற ஒரு கட்சி முதலில் இது போன்றதொரு சிக்கலான விடயத்தில் கைவைக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் அரசாங்கம் அந்த நோக்கத்துக்கான சில பூர்வாங்க நடவடிக்கைகளையாவது இப்போது எடுத்திருக்க வேண்டும். இவ்வாறு நடைபெறுவதாக தெரியவில்லை.



## வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையின் அழகும் வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும் கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை.

எந்த ஒரு விடயத்தையும் அங்கீகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும்.

சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். அவர்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடை அறிய முடியா விட்டாலும் அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும்.

ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க, அதைச் சரியாகச் செய்க.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலத்தை புனரமைத்து தரவும்



ஹட்டன் விக்டன் பிரதான வீதியில் உள்ள பாலத்தின் ஒரு பகுதி உடைந்து வாழ்ந்தமையால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து விக்டனிலிருந்து ஹட்டனுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதே போல் ஹட்டன் பகுதியிலிருந்து விக்டன் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு தோட்ட மக்கள் மற்றும் கணேசா தமிழ் வித்தியாலயம் , விக்டன் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் கடமையாற்றும் ஆசிரியர்களும் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று கற்றல் கற்பித்தல் நடவடிக்கை முன்னெடுக்கின்றனர்.

குறித்த பாலமானது ஏற்கனவே 10 மாதங்களுக்கு முன்னர் உடைந்து யாரும் கண்டு கொள்ளாத நிலையில் பிரதேச மக்களால் மரக்குற்றிகளை கொண்டு திருத்தியமைத்திருந்தனர்.

தற்போது கடும் மழை பெய்து வருகின்ற நிலையில் குறித்த பாலத்தின் ஒரு பகுதி திடீரென மீண்டும் உடைந்து விழுந்தமையினால் பொதுப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாலத்தினை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- எம்.கிருஸ்ணா

# ஐக்கிய நாடுகள் சபை அமைதிக்கான கனவா!





ச.கேனிஷா,
நான்காம் வருடம்,
சமூகவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

"சமாதானத்தின் நம்பிக்கையாக உருவான அமைப்பு, இன்று நியாயத்தை பேச யோசிக்கும் அமைப்பாக மாறிவிட்டதா? மனித உரிமைகள் அனைவருக்கும் சமம் எனக் கூறியது ஆனால் இன்று பல மக்களை அதற்காக ஏங்கி தவிக்கவிடுவதா? ஐக்கிய நாடுகள் சபை அமைதிக்கான கலையா அல்லது களம் கொண்ட அரசியல் மேடையா? "

சர்வதேச கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் முதலாளித்துவத்தின் போக்கு காரணமாக1945 இல் இரண்டாம் உலகப்போரின் பின்னணியில் ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையானது உலக அமைதியை நிலைநிறுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், நாடுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் உருவாக்கப்பட்டது. ஆனால், இன்றைய சூழலில் ஐ.நா. சபையானது உண்மையில் யாருக்காக செயற்படுகிறது என்ற கேள்வி மிக முக்கியமான விவாதப் பொருளாக உள்ளது.

மனித உரிமைகள், சமாதானம், சுதந்திரம் போன்ற சுலோகங்களை வலியுறுத்தக்கூடிய வகையில் செயற்படுவதற்குப் பதிலாக ஐ.நா. சபை தற்போது ஒரு பிரத்தியேக அரசியல் கருவியாக மாறிவிட்டது. உலகில் நடைபெறும் பல மனித உரிமை மீறல்களுக்கும், அகதி பிரச்சினைகளுக்கும், இன அழிப்புகளுக்கும் எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது இருப்பதானது இதற்குச் சான்றாகும். மனித உரிமை என்ற கோட்பாடு இன்று சில அதிகாரம் மிக்க நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றும் ஒரு முறையியலாக ஆகிவிட்டது (Hopgood). சட்டங்கள், ஒப்பந்தங்கள் ஐ.நா சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அவை நடைமுறையில் செயற்படுத்தப்படும்போது, VETO அதிகாரம் கொண்ட சில நாடுகள் அனைத்தையும் முடக்கி விடுகின்றன. ஐ.நா. சபையினால் மேற்கொள்ளப்படும் ஒரு தீர்மானம் உலக மக்களின் நலனுக்கானதாக இருந்தாலும் கூட, குறிப்பிட்ட வலிமை வாய்ந்த நாடுகளின் நலனுக்கு எதிரானதாக அது அமையுமாக இருந்தால் அந்த தீர்மானம் செல்லுபடியாகாது என்பதுதான் கசப்பான உண்மை (Hurd).

உலகம் முழுவதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திய அமெரிக்கா தலைமையிலான படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் இரகசிய நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு சுயாதீன விசாரணையும் ஐ.நா. சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. இது அந்த சபையின் தனித்துவமான 'சர்வதேச நீதித்துறை', 'நடுநிலை அமைப்பு' எனப்படும் அந்தஸ்தை இழக்கச் செய்துள்ளது. (Chomsky). உதாரணமாக, 1994இல் ருவாண்டாவில் இடம்பெற்ற இன அழிப்பைப் பார்த்தும் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையிலிருந்த ஐ.நா. சபையானது, சமூகத்தின் பார்வையில் உயிரற்ற நிலையை அடைந்தது. அந்த இன அழிப்பில் 800,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இதைவிட, தற்காலத்தில் எம்மால் பார்க்கக்கூடிய பாலஸ்தீன மக்களுக்கு எதிராக நடைபெறும் தாக்குதல்களைச் சுட்டிக்காட்டும் பல தீர்மானங்கள் ஐ.நா. சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற போதிலும், அமெரிக்காவின் VETO வலிமையால் அவை செயற்பாடற்றவையாக மாறுகின்றன. மியன்மார் நாட்டில் ரோஹிங்யா இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளும், சீனாவில் உய்கூர் முஸ்லிம்கள் மீதான கட்டுப்பாடுகள் அனைத்தும் ஐ.நா. சபைகளின் மௌனத்திற்குள் அகப்பட்ட நிகழ்வுகளாகவே உள்ளன. இது சமூகநீதிக்கோ, மனித நேயத்திற்கோ ஏற்புடைய சூழ்நிலை அல்ல.

உண்மையில் இந்த சர்வதேச கட்டமைப்பு மற்றும் முதலாளித்துவ போக்கினை Antony Gramcyஇன் கோட்பாட்டின் மூலம் புரிந்துகொள்ள முடியும். இவருடைய மேலாண்மை (Hegemony) என்ற எண்ணக்கரு இதற்கு வலு சேர்ப்பதாக உள்ளது. ஒரு முதலாளித்துவ அரசானது மூட நம்பிக்கைகள், கல்வி, ஊடகம், மதம் மற்றும் கலாச்சாரம் போன்ற அனைத்து சமூகக் கூறுகளிலும் தனது மேலாதிக்கத்தை நிறுவுகிறது. இது ஒரு அறிவுசார் மேலாதிக்கம் (Intellectual and Moral Leadership) என கிரம்சி கூறுகிறார். மக்களும் பிற நாட்டு அரசுகளும் முதலாளித்துவ அரசினை எதிர்க்காமல் அதனுடன் ஒத்துப்போவதற்கு முக்கியக் காரணம் இந்த Hegemony values ஆகும். அதேபோல நிதி மூலதனத்தின் மையமும் இராணுவ ரீதியிலான பலமும் தான் உலக கட்டமைப்பைத் தீர்மானிக்கின்றன. இதனையே லெனின் ஏகாதிபத்தியம் என்கிறார். இவ்வாறான ஒரு மேலாதிக்க நிலையில் இருக்கும் அமெரிக்கா தன்னுடைய சுய இலாபத்திற்காக நேரடியாகத் தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகள் மீது செலுத்தாது தனது அதிகாரத்தை நிறுவத் தன்னை நவகாலனித்துவ வடிவில் வடிவமைத்துக் கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடாக அமைவதே IMF, World Bank மற்றும் World Trade Organisationபோன்ற நிறுவனங்களாகும். தன்னிடமுள்ள நிதி மூலதனத்தினூடாக பல நாடுகளைக் கடன் என்ற கட்டுக்குள் வைத்துள்ளது.

மேலைத்தேய நாடுகளினால் உருவாக்கப்பட்டுள்ள மற்றுமொரு மாயை விம்பம் தான் மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச சட்டங்களினூடாக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்பதாகும். இலங்கையிலும் கூட சிறுபான்மை குழுக்கள் ஜெனீவாவிற்குப் போனால், தமக்கு நீதி கிடைக்கும் எனும் முகமூடி கட்டவிழ்க்கப்பட்டதைக் காணலாம். அத்தோடு, அமெரிக்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து விலகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு சர்வதேச அமைப்பானது உலக மக்களின் நலனுக்காகச் செயற்பட வேண்டும். ஆனால், இன்று அது சிலரின் உத்தரவுகளின்படி செயற்படும் அமைப்பாகத் தோன்றுகிறது. இது சர்வதேச நம்பிக்கைக்கு பெரும் சீர்கேடாகும். இப்போது இருக்கும் இந்த நிலைமையானது ஐ.நா. சபையினை மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. அதன் செயற்பாடுகள் பொதுமக்களின் நலனுக்கானதா? அல்லது சில நாடுகளின் அரசியல் சாதனங்களுக்கானதா? என்பதை நாம் கேள்விக்குள்ளாக்கும் காலம் இது. சுதந்திரம், சமத்துவம், மனித உரிமை ஆகியவை வாய்வார்த்தைக்கு மட்டும் இருக்கக்கூடாது. அவை நடைமுறையில் பிரதிபலிக்க வேண்டும்.

"சர்வதேச சட்டங்கள் சமாதானத்திற்கான கலை அல்ல மாறாக கானல்நீர் என்பதே யதார்த்தம்."

# உள்ளூராட்சி சபைகளில் பெண்களும் ஆட்சி அதிகாரமும்

அ.அச்சுதன்

நாடு பூராகவுமுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் மிக நீண்ட இழு பறிக்குப் பின்னர் சகல சபைகளிலும் ஆட்சியமைத்திருக்கிறது.

அனேகமான அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தாமே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்தன.

இந்த நிலையில் இலங்கையில் முதன்மையான உள்ளூராட்சி சபையொன்றின் நிர்வாகத்தைக் கைப்பற்றி தேசிய மக்கள் சக்தி புதியதொரு வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் தனியொரு கட்சியின் அதிகாரத்திலிருந்த கொழும்பு மாநகரசபையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தேசிய மக்கள் சக்தியால் முடிந்துள்ளது.

இந்த அடிப்படையில் கொழும்பு மாநகர மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விராய் கெலி பல்தசார் இரண்டாவது பெண் மேயர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த ரோசி சேனாநாயக்க மேயராக இருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர் வெற்றியும் இங்கு முறியடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியதிகாரம், பெண் வேட்பாளர்கள் எதிர் நோக்கிய சவால்கள், அரசியல் கட்சிகள் பெண்களுக்கு வழங்கிய இட ஒதுக்கீடு எவ்வாறு காணப்பட்டது இது பற்றிய தகவல்களுடன் முக்கிய விடயங்களைப் பதிவு செய்கிறது இக் கட்டுரை...

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சி என்று அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும் ஒரு அரசியல் அமைப்பு அதில், உள்ளூராட்சி அமைப்புகள் அதன் அடித்தளமாகக் கருதப்படுகின்றன, கிராம, நகர நிர்வாகங்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் இந்த அமைப்புகள், அவர்களின் அன்றாட தேவைகளுக்குத் தீர்வு காணும் திறனுடையவை எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது வெறும் ஒரு முற்போக்கு நடவடிக்கையாக அல்ல அது மக்கள் ஆட்சியின் உயிரோட்டமாக விளங்குகிறது.

இலங்கை முழுவதும் இம்முறை 151 சபைகளில் தேசிய மக்கள் சக்தி தனித்து ஆட்சியமைத்திருக்கிறது. வடக்கு கிழக்கில் உள்ள கூடுதலான சபைகளில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் செய்கின்ற கட்சிகள் ஆட்சியமைத்திருக்கின்றன. அதிலும், கூடுதலான சபைகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைத்திருக்கின்றது திருகோணமலை மாநகர சபை, யாழ்ப்பாணம் மாநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை என்பன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அதிகாரத்தில் காணப்படுகின்றன. ஆட்சியமைத்திருக்கின்ற சபைகள் எவ்வாறு கொண்டு நடத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்து எதிர்காலத்தில் இவ்வெண்ணிக்கை சுமையேற்றிய தராசைப் போல ஏறியிறங்கும்.

அரசியலில் பெண்களின் பங்கேற்பு குறித்து அரசியல் ஆய்வாளர், ஊடக விரிவுரையாளர் அ.நிக்ஸன் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என கூறினாலும், தேர்தல்களில் போட்டியிடும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

போட்டியிட்ட பெண்களும் வெற்றி பெறுவதில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால் 2025ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பெண்கள் போட்டியிட்டாலும், வெற்றிபெற்ற எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைவாகவே உள்ளன.

பாலின சமத்துவம், சமூக மேம்பாடு மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தப் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகளவில் இருக்க வேண்டும் என 2012 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இலங்கை நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் - 5.8% ஆகவும் மாகாண சபைகளில் - 0 % ஆகவும் உள்ளூர் அதிகார சபைகளில் - 1.9% ஆகவும் உள்ளன.

2012ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபை மட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, 2017ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய கலப்புத் தேர்தல் முறையின் கீழ் நடைபெற்ற முதலாவது தேர்தலாக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைந்திந்தது.

உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 சதவீதமான ஒதுக்கீட்டை நிலைநாட்டும் நோக்கில் இடம்பெற்ற முதலாவது தேர்தலாகவும் அதனை அவதானிக்க முடியும்.

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,486 என்ற எண்ணிக்கையில் இருந்து 8,356 ஆக அதிகரிக்கும் நோக்கில் தேர்தல் திருத்தச் சட்டத்தின் பிரிவு '27 எப்' இற்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட்டன. அதாவது ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் மொத்த உறுப்பினர்களில் 25 சதவீதமானோர் பெண் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பது இத் திருத்தத்தின் உள்ளடக்கம்.

இந்த அடிப்படையில், 1.8 சதவீதமாக இருந்த பெண்கள் பிரதிநிதித்துவத்துடன் ஒப்பிடும்போது, 25 சதவீத அதிகரிப்பது மிகப் பெரிய தொகையாகும். ஆனால் எதிர்பார்க்கப்பட்டது போன்று 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட பெண்கள் வெற்றி பெற்ற எண்ணிக்கை மிகவும் குறைவு.

1.9 சதவீதமான பெண்களே உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகித்திருந்ததாகப் பெண்கள் மற்றும் ஊடக கட்டமைப்பு அறிக்கை தெரிவித்திருந்தது. இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் 1.9 வீதமான பெண்கள்தான் வெற்றி பெற்றதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது என்றார்.

பெண்கள் கண்டிப்பாக அரசியலில் இறங்க வேண்டும் எமக்கானதை எமது சமூகத்துக்கானதை எம்மால் முடிந்த வரை பெற்றுக்கொடுக்க நாம் முன்வர வேண்டும், நாமும் அரசியல் நிலைவரங்களை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும், எம்மாலும் சாதிக்க முடியும் என்று காட்ட வேண்டும், தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்கள் விருட்சமாகி நிற்கின்றனர் இந்தப் பெண்களால் ஏன் அரசியலில் விருட்சமாக முடியாது. முடியாது என்ற மனப்பாங்கை வளர்த்து வைத்துள்ளார்கள் அந்த மூடக் கொள்கையைத் தகர்த்து அரசியலிலும் பெண்கள் தம் பங்கைப் பெற்றுத் திறம்படச் செயற்பட வேண்டும். அரசியல் என்றால் அது ஆண்களுக்கு உரியது என்று பேசப்படும் விடயத்தை உடைத்தெறிந்து பெண்கள் அரசியலில் காலூன்ற வேண்டும் என்கிறார் திருகோணமலை மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ள விஜயதர்சினி இரத்தினஜோதி

பெண் வேட்பாளராக அரசியல் பயணத்தில் அனுபவித்த முக்கியமான சவால் பெண் வேட்பாளர் என்றாலே சவால்தான் அரசியலுக்குள் சென்றாலும் சரியான முறையில் அங்கீகாரம் கிடைப்பதில்லை, சமூக மட்டத்தில் ஒரு சிலரின் எதிர் மறையான கருத்துக்கள் எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தேவையற்ற பொய் வதந்திகள் பரப்புதல், அது மட்டுமின்றி, சமூக ஊடகங்களில் பிழையாக எழுதுதல் இதனால்தான் ஏனைய பெண்களுக்குச் சொல்ல விரும்புவது முதலில் எங்களை நாங்கள் நம்ப வேண்டும், நாங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தால் ஏனையவற்றிற்கு அஞ்சத் தேவை இல்லை, எடுக்கும் முயற்சிகள் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருந்தால் நிச்சயம் ஒரு நாள் வெற்றிபெறலாம் என்று கிண்ணியா நகர சபை தேர்தலில் போட்டியிட்ட அப்துல் லத்தீப் முகைமினா தனது கருத்தைத் தெரிவித்தார்.

பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான இட ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக எமது நாட்டு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக தொடர்ச்சியாகப் போராடி வந்தனர். அதன் பிரதிபலனாக 2018 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முதன் முறையாக இந்த ஒதுக்கீடு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. ஆனால் 25 சதவீத இட ஒதுக்கீடு கட்டாயமாக வழங்கப்படவேண்டியிருந்த நிலையில் பல சபைகளில் அதனை நிறைவேற்ற முடியாமல்போனது.

ஜனநாயகமும் தேர்தலும், மக்களால் நேசிக்கப்படுகின்ற அதேவேளை, விமர்சிக்கப்படும் விடயங்களாகவும் உள்ளன இந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் முக்கியமானதாக கருதப்படுகின்றது , பெண்கள் பிரதிநிதித்துவத்தை வழங்குவதில் தேர்தல் ஆணைக்குழு இம்முறை ஓரளவுக்குச் சிறப்பாக நடந்து கொண்டதாகவே தெரிகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை மாநகர சபை பிரதான இடம்பெறுகின்றது. திருகோணமலை மாநகர சபையில் 25 உறுப்பினர்களில் 05 பெண்கள், வெருகல் பிரதேச சபையில் 13 உறுப்பினர்களில் 03 பெண்கள், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் 21 உறுப்பினர்களில் 04 பெண்கள், மூதூர் பிரதேச சபையில் 22 உறுப்பினர்களில் 04 பெண்கள் என இம்முறை தெரிவு செய்யப்பட்டமை முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

பெண்களின் அரசியல் செயற்பாடுகளை இம்முறை பார்க்கின்ற போது அவர்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வதைக் காணமுடிகின்றது .

மாநகர சபை கட்டளைச் சட்டம் 77 ஆண்டுகளாகியும் இன்னும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படவில்லை எனவே, அந்த சட்டத்தைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துத் தாருங்கள் என மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப்பிடம் கொழும்பு கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டார தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் காயத்ரி விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வ்ராய் கெலி பல்தஸார், உறுப்பினர் காயத்ரி விக்ரம சிங்க மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப்பை மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே காயத்ரி விக்ரமசிங்க இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இவ்வேண்டுகோளை ஆளுநர் ஹனீப் யூசுப் அவதானமாகச் செவிமடுத்ததோடு, இது பற்றி பரிசீலனை செய்வதாகவும் உறுதி கூறினார்.

இச்சட்டம் 1987ஆம் ஆண்டு சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில், உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அரசியலில் புதிய மாற்றத்தை வரலாற்றை உள்ளூராட்சி சபைகளில்

பெண்கள் ஏற்படுத்தி வருகின்றனர்.

இது போலவே அரசியலில் புதிய வரலாற்றை மலையகத்திலும் பெண் தலைமைகள் நிலைநாட்டி வருகின்றனர்.

வெற்றிபெற்று பொம்மைகளாக இருப்பதைவிடத் தோல்வியடைந்து வீர பெண்ணாக இருப்பதே மகிழ்ச்சி என சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் வெற்றி வெற்று, பொம்மைகளாக இருப்பதை விட தோல்வி அடைந்து வீர பெண்ணாக இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார். சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நோர்வூட் வெஞ்சர் ஆலய மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் உபதலைவர் டொமினிக், தேசிய அமைப்பாளர் விக்னேஷ்வரன், பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் தியாகராஜா, அமைப்பாளர்களான சதீஸ்குமார், கேதீஸ், தேவராஜ், விஜயராகவன் உட்பட இளைஞர், மகளிர் அணி சார்பிலும், தோட்ட கமிட்டி தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர்.இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பொதுச்செயலாளர்.

கடந்த முறை நாம் மைக் சின்னத்தில் போட்டியிட்ட போது நிறைய பேர் என்னிடம் கேட்டார்கள், அரசாங்கத்தோடு நீங்கள் சேர்ந்து கேட்டிருந்தால் வெற்றியடைந்திருப்பீர்கள், தனியாக கேட்டதால் தான் தோல்வியடைந்து விட்டீர்கள் என்று இன்று அரசாங்கத்தின் பேரலையில் வெற்றி பெற்ற நிறையப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் இருக்கிறார்கள். ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

என்றைக்கு அரசாங்கம் ஆணை கொடுக்கும் மக்களுக்குச் சேவை செய்யலாம் என்று அரசாங்க மேல் மட்ட ஆணைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதைப் போல் தெரியவில்லை, என்றைக்கு ஆணை கிடைக்கும், அந்த ஆணை வந்தவுடன் சேவை செய்வோம் என ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி பெற்று இப்படி பொம்மையாக இருப்பதை விட தோல்வியடைந்து வீர பெண்ணாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

தோல்வியடைந்தாலும் விதையாகப் பிரதேச சபை ஆசனங்களைப் பெற்றிருக்கிறோம். இந்த விதை இன்னும் பெரிய விருட்சமாக மாறும். அதை மாற்றாமல் என்னுடைய தந்தை சந்திரசேகரன் எப்படி ஓயவில்லையோ அதேபோன்று தலைவர் சந்திரசேகரனுடைய ஆசையின் படி, அவருடைய ஆசியோடு அவருடைய கனவை நனவாக்காமல் இந்த அனுஷா சந்திரசேகரன் ஒருபோதும் ஓயமாட்டேன்.

உங்களுடைய வாக்குகளால் தான் எங்களுடைய கட்சியின் வெற்றி சாத்தியம் ஆக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய என்பதை விட நம்முடைய கட்சி, நமது மாற்றம், நம்முடைய கட்சியின் வளர்ச்சி உங்களால் தான் சாத்தியமாகியது. ஆகவே என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த உங்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் பல விடயங்கள் பதிவு செய்யப்படுகின்றது.

இலங்கையில் வாக்காளர் தொகையில் 56 வீதம் பெண்கள்தான். பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டியதும் அவர்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதும் பெண் வாக்காளர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

வொஷிங்டன்

10–12 நாட்களுக்குள் போரை நிறுத்தாவிட்டால்

# “100 சதவீதம் வரி”

## புட்டினுக்கு ட்ரம்ப் காலக்கெடு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைனில் போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு தான் அளித்த 50 நாள் காலக்கெடுவை 10 முதல் 12 நாட்களாகக் குறைத்துள்ளார்.



இவ்வாறு போரை நிறுத்தாவிட்டால், ரஷ்யா மீது வர்த்தக கட்டுப்பாடுகளும் 100 சதவீதம் வரியும் விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஒரே இரவில் 300-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள், 4+ ஏவுகணைகளை கொண்டு உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப் படை தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையே ஜனாதிபதி ட்ரம்ப்பின் போர் நிறுத்த முயற்சிக்கு பலன் கிடைக்காத சூழலில், அங்கு தாக்குதல் அதிகரித்த வண்ணம் உள்ளது.

“இனியும் காத்திருப்பதில் எந்தப் பலனும் இல்லை. போர் நிறுத்தம் சார்ந்த முன்னேற்றம் எதுவும் நடைபெறவில்லை. புட்டின் இது குறித்த முடிவை எடுக்க வேண்டும். மக்கள் அதிகளவில் உயிரிழக்கின்றனர். புதினின் செயல்பாட்டின் மீது அதிருப்தி கொண்டுள்ளேன். அவருடன் பேச்சுவார்த்தை நடத்த எனக்கு இப்போது ஆர்வம் இல்லை. ரஷ்ய மக்களை நான் நேசிக்கிறேன். அதனால் கூடுதல் வரி விதிப்பது குறித்து கொஞ்சம் யோசிக்கிறேன். அதை ரஷ்யாவோடு செய்ய எனக்கு விருப்பம் இல்லை. அதனால் அடுத்த 10 முதல் 12 நாட்களுக்குள் போரை நிறுத்த வேண்டும் என கெடு விதிக்கிறேன். நான் அமைதியை விரும்புகிறேன். அது நடக்காத பட்சத்தில், ரஷ்யா மீது வர்த்தக கட்டுப்பாடுகளும் 100 சதவீதம் வரியும் விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா ஏற்றுமதி செய்யும் பொருட்களை வாங்கும் நாடுகளின் மீதும் கூடுதல் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் தாக்கம் உலகளவில் தீவிரமானதாக இருக்கும் என பார்க்கப்படுகிறது.




# மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்த அவுஸ்திரேலியா

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை அவுஸ்திரேலியா வெள்ளையடித்துள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் நான்கு போட்டிகளிலும் வென்ற அவுஸ்திரேலியா, சென். கிட்ஸில் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்ற ஐந்தாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 5-0 என மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

மே. தீவுகள்: 170/10 (19.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷிம்ரோன் ஹெட்மயர் 52 (31), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 35 (17), ஜேஸன் ஹோல்டர் 20 (15), மத்தியூ போர்டே 15 (10), அகீல் ஹொஸைன் 11 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் டுவார்ஷுஸ் 3/41 [4], நாதன் எலிஸ் 2/32 [3.4], கிளென் மக்ஸ்வெல் 1/6 [1], அடம் ஸாம்பா 1/20 [3], ஷோன் அபொட் 1/30 [4], ஆரோன் ஹார்டி 1/39 [4])

அவுஸ்திரலியா: 173/7 (17 ஓவ.) (துடுப்பாட்டம்: மிற்செல் ஓவன் 37 (17), கமரன் கிறீன் 32 (18), டிம் டேவிட் 30 (12), ஆரோன் ஹார்டி ஆ.இ 28 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 3/17 [4], அல்ஸாரி ஜோசப் 2/21 [2.1], ஜேஸன் ஹோல்டர் 2/36 [3])

போட்டியின் நாயகன்: பென் டுவார்ஷுஸ், தொடரின் நாயகன்: கமரன் கிறீன்.

பீஜிங்

சீனாவில் கடும் மழை:

# இதுவரை 34 பேர் மரணம்

சீனாவில் கடும் மழை, வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது. 80,000 பேர் மாற்று இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.



தலைநகர் பீஜிங்கில் வரலாறு காணாத அளவுக்கு கடும் மழை கொட்டி வருகிறது. இடைவிடாத மழையால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளன.

மியுன், யாங்கிங் ஆகிய மாகாணங்கள் கடுமையாக சேதம் அடைந்துள்ளன. ஏராளமான கார்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

பாதிக்கப்பட்ட சுமார் 80,000 மக்கள் பீஜிங்கிற்கு இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களில் 17,000 பேர் மியுன் மாகாண மக்கள் ஆவர்.

தொடர் மழையால் ஹெபாய் மாகாணம் லுனான் கவுன்டியில் நிலச்சரிவு ஏற்பட்டு, 4 பேர் பலியாகி உள்ளனர். 8 பேரை காணவில்லை. மியுன் மாகாண அணைகளில் நீர்மட்டம் அபாய அளவை எட்டியதால் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ஒட்டுமொத்தமாக மழை,வெள்ளத்திற்கு இதுவரை 34 பேர் பலியாகி உள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் மீட்புபணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

# சம்பியனான செட்டிபுலம் பிளாக் டிகேர்ஸ்

பூ.லின்ரன்

செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக் கழகமும், செட்டிபுலம் ஐயனார் இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் செட்டிபுலம் பிளாக் டிகேர்ஸ் அணி சம்பியனானது






ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் சனிக்கிழமை (26) நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் செட்டிபுலம் பீனிக்ஸ் வொரியேர்ஸ் அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வென்றே பிளாக் டிகேர்ஸ் சம்பியனானது.

கீவ்

உக்ரைன் சிறைச்சாலை மீது

# ரஷ்யா வான்வழி தாக்குதல்: 17 பேர் பலி

உக்ரைனின் சப்போரியா மாகாணம் பிலன்கிஸ்கா நகரில் உள்ள சிறைச்சாலை மீது ரஷ்யா நடத்திய வான்வழி தாக்குதலில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.



உக்ரைன், ரஷியா இடையேயான போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால் அது தோல்வியில் முடிந்தது.

அதேபோல், போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா, உக்ரைன் நடத்திய நேரடி பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. இதனால், போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா அதிரடி தாக்குதல் நடத்தியது.

உக்ரைனின் சப்போரியா மாகாணம் பிலன்கிஸ்கா நகரில் உள்ள சிறைச்சாலை மீது ரஷியா வான்வழி தாக்குதல் நடத்தியது. டிரோன்கள் மூலம் சிறைச்சாலை மீது குண்டுகள் வீசப்பட்டன. இந்த தாக்குதலில் சிறைக்கைதிகள் உள்பட 17 பேர் உயிரிழந்தனர். மேலும், 80 பேர் படுகாயமடைந்தனர்.



# ஹொங்கொங்கின் பயிற்சியாளராக கௌஷால் சில்வா

ஹொங் கொங்கின் புதிய தலைமைப் பயிற்சியாளராக இலங்கையின் முன்னாள் வீரர் கௌஷால் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இறுதியாக 2018ஆம் ஆண்டு விளையாடிய 39 வயதான சில்வா, 2019ஆம் முதல் இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவில் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியிருந்தார்.



ஐதராபாத்

# இன்று விண்ணில் பாய்கிறது ‘நிசார்’

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்காவின் நாசாவின் முதல் கூட்டு செயற்கைக்கோளான நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (நிசார்), இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி-எப்16 ரொக்கெட் மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து இன்று புதன்கிழமை (30) மாலை 5.40 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.

ரொக்கெட்டை விண்ணில் ஏவுவதற்கான 28 மணி நேர கவுண்டவுன் செவ்வாய்க்கிழமை (29) பகல் 1.40 மணிக்கு தொடங்கியது. இதுகுறித்து இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறும் போது, ‘இஸ்ரோ-நாசா இணைந்து பூமியைக் கண்காணிக்கும் ரேடார் செயற்கைக்கோளான ‘நிசார்’ செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளன. இந்த செயற்கைக்கோள் 12 நாட்களுக்கு ஒரு முறை உயர் தெளிவுத்திறன் கொண்ட பூமித் தரவுகளை வழங்கும்’ என்றார்.

சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து:

# டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது

சிம்பாப்வே, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது புலவாயோவில் இன்று புதன்கிழமை (30) பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

கேன் வில்லியம்சன் இல்லாதபோதும் பலமானதாகவே நியூசிலாந்து காணப்படுகிறது. குழாமுக்கு இரண்டாண்டுகளுக்குப் பின்னர் திரும்பியுள்ள ஹென்றி நிக்கொல்ஸுக்கு தனது பெறுமதி இன்னுமிருக்கிறது என்பதை உணர்த்துவதற்கான தொடர் இத்தொடர் நோக்கப்படுகிறது.

மறுபக்கமாக வேகப்பந்துவீச்சுப் பக்கம் வில் ஓ ரூர்க்கே, மற் ஹென்றியுடன் மூன்றாவது வேகப்பந்துவீச்சாளராக புதுமுகவீரர் மத்தியூ பிஷரா அல்லது ஜேக்கப் டஃபியா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

சிம்பாப்வேயைப் பொறுத்த வரையில் சிகண்டர் ராசா, பென் கர்ரன் போட்டியில் விளையாடுவது அவ்வணிக்கு பலத்தையளிக்கின்ற நிலையில், ஷோன் வில்லியம்ஸ், பிரயன் பென்னிட், அணித்தலைவர் கிறேய்க் எர்வினுடன் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கினாலே நியூசிலாந்துக்கு சிம்பாப்வே சவாலை வழங்க முடியும்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 30, ஜூலை 2025, இல.8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.